R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
July 2022




"எல்லாரும் ஆச்சரியப்பட்டு,
தேவனை மகிமைப்படுத்தினார்கள்;
அல்லாமலும், அவர்கள் பயம் நிறைந்தவர்களாகி,
அதிசயமான காரியங்களை இன்று
கண்டோம் என்றார்கள்" லூக்கா 5:26

"அவர்கள் பயத்தோடும்
மகா சந்தோஷத்தோடும்
கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப்
புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு
அறிவிக்க ஓடினார்கள்" மத்தேயு 28:8




Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Tuesday 6.00 P.M on Tamilan TV
Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):

- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST, POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202, S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan






தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 22 ஜூலை 2022 கனி 8

MONTHLY

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3;16




ஆசிரியர்
B. அர்ஜுனன்
THE WORD OF CHRIST

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

பாடம் : 31
தலைப்பு : பிரிவினை - Division
வேத வாசிப்பு : ஏசாயா 59:1-13




1. உங்கள் அக்கிரமங்களே - ஏசா.59:2
2. பகையாக நின்ற பிரிவினையாகிய - எபே.2:14-16
3. பிரிவினை, இடறல்களை - ரோம.16:17



இவர்களுடைய
ஊழியத்திற்காக ஜெபியுங்கள்


M.CHANDRAKUMAR, Evangelist
CHURCH OF CHRIST
Maniyampet,
Thengal -632 404
RANIPET DT
Cell:93605 53848




the word of christ இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
YouTube வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509








THE WORD OF CHRIST
Monthly Magazine
Editor
B.ARJUNAN


திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 263

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. உன்னைக் கொல்லுகிறவனுக்கு முன்பாக; நான் தேவனென்று நீ சொல்வாயோ? என்று எந்த தீர்க்கனைக் கொண்டு கர்த்தர் பேசினார்?
2. விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடவேண்டுமா?
3. மிகாவேல் என்ற தூதன் பிரதான அதிபதிகளில் ஒருவனா?
4. பவுல் எந்த சபையாருக்கு நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்தபோது உங்களுக்கு முன்னறிவித்தோம் என்று எழுதியிருக்கிறார்?
5. எவர்கள் என் ஜனத்தின் பாவத்தைத் தின்று, அவர்களுடைய அக்கிரமத்தின்பேரில் பசிதாகமாயிருக்கிறார்கள்?
6. நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு... என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. என் ஜனத்தின் பேரில் சீட்டுப்போட்டு, ஆண்குழந்தைகளை வேசிப்பணையமாகக் கொடுத்து, மதுபானம்பண்ணும்படி, பெண் குழந்தைகளைத் திராட்சரசத்துக்குக் கிரயமாகக்கொடுத்ததினிமித்தமும் அங்கே அவர்களோடு என்ன செய்வேன் என்கிறார்?
8. எவர்கள் புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்?
9. வேகமானவன் ஓடியும் எது இல்லை?
10. நீ வெட்கப்படாமல், தேவ வல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடே கூடத் தீங்கநுபவி என பவுல் யாருக்கு சொல்லியிருந்தார்?

## வேதாகம ஆய்வு... 48 ஓர்னான் - Ornan



1. இவன் மறுபெயர் அர்வனா – 2சாமு.24:24
2. ஓர்னானும் அவனுடைய நாலு குமாரரும் தேவ தூதனைக் கண்டு ஒளித்துக்கொண்டார்கள் – 1நாளா.21:21
3. தாவீதைப் பார்த்து தரை மட்டும் குனிந்து வணங்கினான் – 1நாளா.21:21
4. ஓர்னான் தாவீதுக்கு எல்லாவற்றையும் கொடுக்க முன்வந்தான் – 1நாளா.21:23
5. தாவீது அவனிடத்தில் இலவசமாக வாங்காமல் 600 சேக்கல் நிறைபொன்னை கொடுத்து அங்கே பலீபீடத்தை கட்டி பலியிட்டான் – 1நாளா.21:25,26
6. சாலமோன் இங்கு ஆலயம் கட்டினான் – 2நாளா.2:1
7. அர்வனாவின் களத்திற்கு நேரே ஜனத்தை உபாதிக்கிற தூதனை தாவீது கண்டான் – 1சாமு.24:17

சிறுவர் பகுதி



## ஆபிரகாம் - Abraham

ஹாய் குட்டீஸ்! நமது தேசத்தந்தை என்று அழைக்கப் படுகிறவர் யார் தெரியுமா? ஓ, தெரியுமே மகாத்மா காந்தியடிகள் தானே என்கிறீர்கள். சரியாகச் சொன்னீர்கள்! Good! நமது பரிசுத்த வேதாகமத்திலே தேவனாகிய கர்த்தர் ஆபிரகாமை திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக்கினார். ஏன் தெரியுமா? நான் உனக்கும் எனக்கும் நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப்பண்ணுவேன் என்றார். இவர் வாழ்ந்த காலத்தில் ஜனங்கள் சூரியன், சந்திரன் நட்சத்திரங்கள் என்று பலவற்றை கடவுள்களாக வணங்கிட்டு வந்தாங்க. ஆனா, ஆபிரகாம் மட்டும் இவற்றையெல்லாம் படைத்த ஒரே தேவனும், உண்மையான தேவனுமாகிய கர்த்தரை மட்டுமே வணங்கிவந்தார். அதனால, தேவன் ஆபிரகாமை ரொம்ப ஆசீர்வதித்தாரு. ஆபிரகாம் பெரிய பணக்காரன் நிறைய வேலைக்காரர்களும், கால்நடைகளும் இவனுக்கு இருந்தது. ஆபிரகாமுக்கோ பிள்ளைகள் இல்லை. ஆனாலும் இந்த ஆபிரகாம் கர்த்தர் சொன்னபடியெல்லாம் செய்து கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து உண்மையாய் வாழ்ந்து வந்தாரு.

ஒருநாள் "கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி.12:1,2) என்றார். உடனே ஆபிரகாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து கர்த்தர் காண்பித்த இடத்துக்குப் போய்விட்டார். எப்படி கீழ்ப்படிந்திருக்கிறார் பார்த்தீர்களா? அதனால கர்த்தர் அவனுக்கு ஈசாக்கு என்ற மகனைக் கொடுத்து சந்தோஷப்படுத்தினார். அப்புறம் என்ன நடந்தது தெரியுமா? ஈசாக்கை கொடுத்த தேவன் அவனை மோரியா தேசத்திலிருக்கிற ஒரு மலையின்மேல் தகனபலியாகப் பலியிடு என்று கூறிவிட்டாரு. ஆபிரகாமுக்கு எப்படியிருந்திருக்கும். ஒரே மகன், வயதான காலத்தில் பிறந்தவன், ஆனாலும் ஆபிரகாம் தான் நேசித்த தன் மகனை தகனபலியாக பலியிடும்படி கத்தியை எடுத்து வெட்ட துணிந்தான். ஆபிரகாமை சோதிக்கிறதற்காகத் தான் இப்படிச் சொன்னார். கர்த்தர் உடனே ஆபிரகாமைப் பார்த்து பிள்ளையாண்டான் மீது உன் கையைப்போடாதே என்று சொன்னார். பார்த்தீங்களா, ஆபிரகாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவர் சொன்னதையெல்லாம் செய்து அவர்மேல் விசுவாசமாயிருந்தான், தன் மகனையும் திரும்பப் பெற்றுக்கொண்டான்.



அன்பு தம்பி, தங்காய், நாமும் இவரைப்போல நம்மைப் படைத்த ஒரே தேவனை விசுவாசிப்போமா? அப்பொழுது கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பார்! O.K. வா குட்டீஸ் அடுத்தமாதம் மீண்டும் சந்திப்போம்.

**மனப்பாடவசனம்** ஆபிரகாம்

**"நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்றார்" - ஆதி.14:22**



தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 22 ஜூலை - 2022 கனி - 8

ஆசிரியருரை

## அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுகிறதில்லை
## He Does Not Forsake His Saints



மோசே தன்னுடைய காலம் முடியும் தருவாயில் யோசுவா என்ற தாசனை நோக்கி சொல்லும்போது; "கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார்; அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவது மில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றான்" (உபா.31:8). 40 வருடங்களாக வனாந்தர பயணத்தில் வந்த யோசுவாவை இந்த வார்த்தைகள் இன்னும் கொஞ்சம் உற்சாகப்படுத்தியிருக்கும். மோசேக்கு அடுத்தபடியாக தேவனுடைய ஜனங்களை வழிநடத்தும்படி தெரிந்துகொள்ளப்பட்டவன் இந்த யோசுவா. ஆகையால் மோசே அவனை அழைத்து இஸ்ரவேலர் எல்லாரும் பார்த்திருக்க அவனை நோக்கி இவ்விதமாகச் சொன்னார். அவன் 40 வருட காலமாக மோசேயின் பின்னே சென்றவனாக இருந்தான். மோசேயின் காலம் முடியப்போகிற நேரம் வந்தது. ஆகையால் அவனைப் பெலப்படுத்தும்படியாக கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர் அவர் உன்னோடே இருப்பார் என்று மோசே அவனை உற்சாகப்படுத்தினான். புதிய பொறுப்பை கொடுத்தவுடன் சிலருக்கு கலக்கம் ஏற்படும். எப்படி வழிநடத்தப் போகிறோம், என்ன செய்யபோகிறோம், யார் நமக்கு உதவியாயிருப்பார் என்ற கேள்விகள் மனதுக்குள் ஏற்படும். இதற்கெல்லாம் விடையாக அமைந்தது மோசேயின் வார்த்தைகள். தேவன் தமக்கு முன்பாக செல்லும்போது கலக்கம் ஏன்? கவலை ஏன்? பயம் ஏன்? ஆகையால் அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம் என்றார். நீங்கள் கர்த்தருடைய பிள்ளையாக இருப்பீர்களானால் இவ்வார்த்தைகள் உங்களுக்கும் பொருத்தமுள்ளதாக இருக்கிறது. அன்று யோசுவாவை வழிநடத்தின கர்த்தர் இன்றும் என்றும் மாறாதவராகவே இருக்கிறார். கர்த்தர் இறுதி கட்டளை கொடுத்து அப்போஸ்தலர்களை அனுப்பும்போது "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களோடுகூட இருக்கிறேன் என்றார்" (மத்.28:20). இது அப்போஸ்தலர்களுக்கு பெலத்தைக் கொடுத்தது. அதைப்போல நமக்கும் இவ்வசனம் பெலத்தைக் கொடுக்கும் என்று நம்புகிறேன்.

மேலும், நாம் வாசிக்கிறோம்; "உன் தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால், அவர் உன்னைக் கைவிடவுமாட்டார், உன்னை அழிக்கவுமாட்டார், உன் பிதாக்களுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த

உடன்படிக்கையை மறக்கவுமாட்டார்" (உபா.4:31). இஸ்ரவேலின் தேவன் வாக்குமாறாதவர். ஆகையால் இஸ்ரவேலரை அதிகமாக நேசித்தார். பல முறை அவர்களை மன்னித்து தான் முற்பிதாக்களுக்கு ஆணையிட்ட வாக்கின்படியாக அவர்களுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாக கொடுத்தார். "கர்த்தர் நியாயத்தை விரும்புகிறவர்; அவர் தமது பரிசுத்தவான்களைக் கைவிடுவதில்லை; அவர்கள் என்றைக்கும் காக்கப்படுவார்கள்; துன்மார்க்கருடைய சந்ததியோ அறுப்புண்டுபோம்" என சங்.37:28 -ல் வாசிக்கிறபடி அவர் தமது பரிசுத்தவான்களை கைவிடாத தேவனாயிருக்கிறார். இஸ்ரவேலரை அழைத்த தேவன் அவர்களுடைய தேவைகளை சந்தித்து அற்புதவிதமாக வனாந்தரத்தில் நடத்திக்கொண்டுவந்தார். எட்டு வயதில் ராஜாவான யோசியாவைக்குறித்து 2இரா.22:2-ம் வசனத்தில் படிக்கிறோம். "அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடந்தான்". இன்றைக்கும் நம்மால் அவ்விதமாக நடக்கமுடியும். சிறுபிள்ளைகளை அந்தவிதமாக வழிநடத்துங்கள். அவர்கள் முதிர்வயதிலும் அவைகளை விட்டுவிடாதிருப்பார்கள். இந்த யோசியாவுக்கு எட்டுவயதில் என்ன தெரியும் என்று அநேகர் நினைத்திருக்கக்கூடும். ஆனால் அவனைக்குறித்து அவன் தன் தகப்பனாகிய தாவீதின் வழியிலெல்லாம் வலது இடதுபுறம் விலகாமல் நடந்தான் என்று வேதம் சொல்லுகிறது அப்படியானால் தாவீதைப்போல கர்த்தருக்குப்பிரியமாய் நடந்திருக்கிறான். ஆகையால் இவனுடைய ராஜ்யபாரத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். மற்ற ராஜாக்களைப் பார்க்கிலும் அதிகநாட்கள் ராஜ்யபாரம் செய்தான். அவனுடைய தேவனாகிய கர்த்தர் அவனோடு இருந்து அவனுடைய கைபிரயாசத்தை ஆசீர்வதித்தார். இன்றைக்கு நாமும் அவ்விதமாக ஆசீர்வதிக்கப்பட நம்முடைய முற்பிதாக்கள் எப்படி பக்திவைராக்கியத்தோடு வாழ்ந்தார்களோ அந்தப்படியாக தேவனுக்குப் பிரியமாக வாழும்போது; அவர்களோடு இருந்து அவர்களை வழிநடத்தின கர்த்தர் நமக்கு முன்பாக இருந்து, நம்மையும் வழிநடத்துவார்.

நாம் அவரை விட்டு விலகும்போது என்ன சம்பவிக்கும். "அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்களை தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்" (ரோம.1:21-24). மேலும், "தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்" (ரோ.1;28). தேவன் மனிதனை மிக அழகானவனாக இந்த பூமியை ஆண்டு கொள்ளும்படியாக அவனைப் படைத்தார். அவனோ, அநேக உபாய தந்திரங்களை தேடிக்கொண்டு தேவனைவிட்டு வீணானவைகளைப் பின்பற்றி வீணராய்ப் போய்விட்டான். "தன் கூட்டைவிட்டு அலைகிற குருவி எப்படியிருக்கிறதோ, அப்படியே தன் ஸ்தானத்தைவிட்டு அலைகிற மனுஷனும் இருப்பான்" என்ற நீதி.27:8-ன்படி நடந்தது. அன்பானவர்களே, நம்மை



நமக்கும் கொடுத்திருக்கிறார். அதை ஆசீர்வதிக்க வல்லமையுடைய தேவன் நம்மோடிருக்கும் போது அவருக்குப் பிரியமானதை, சரியானதைச் செய்வோம். நம் வாழ்க்கை கடினமாயிராமல் இலகுவாயிருக்கும்.

இரண்டாவதாக, 'பொய்யனுக்குச் செவிசாய்க்காதிருங்கள்'. Don`t listen to a liar:

யார் பொய்யன்? பொய்க்குப் பிதாவாகிய பிசாசு தான் பொய்யன். ஆம், அன்று சர்ப்பம் உருவில் வந்த பிசாசு தான் ஏவாளை வஞ்சித்தது. எப்போதுமே பொய்யன் அல்லது பிசாசு நம்முடைய நலனை விரும்பாதவன். இப்பேர்பட்டவனுக்கு நாம் செவி கொடுக்கும் போது அவனைப்போல மாறுகிறோம்: "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தி லில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்" (யோவா.8:44) என்று வேதம் கூறுகிறது.

இது எவ்வளவு உண்மை! அன்று ஏவாளிடத்தில் இதையே செய்தான். "...சர்ப்பம் ஸ்திரீயை நோக்கி: நீங்கள் சாகவே சாவதில்லை" (ஆதி.3:4) என்றான். தேவனோ, "ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:17). பார்த்தீர்களா? பிசாசு நீங்கள் சாகவே சாவதில்லை என்றான். தேவனோ சாகவே சாவாய் என்றார். இப்படித்தான் நம் வாழ்க்கையில் நம்முடைய நலனை விரும்பாத பிசாசின் குணங்கள் கொண்ட அநேகர் பொய்யான ஆலோசனைகளைக் கூறி குடும்பத்தையே சீரழித்துவிடுவார்கள். அதனால் அநேகக் குடும்பங்களில் சண்டை, சச்சரவும், கணவன் மனைவிக்கிடையே நல் உறவு இல்லாமை போன்ற எத்தனை எத்தனையோ குழப்பங்கள் ஏற்படுவதுண்டு. சத்தியபரராகிய இயேசுவைப் பின்பற்றுகிற நாம் சத்தியபரரின் ஆலோசனைக்கே செவிசாய்க்க வேண்டும். பொய்யனாகிய பிசாசு பிரிவினைகளை உண்டுபண்ணவும், கொல்லவும், அழிக்கவுமே வருகிறான். அவன் எப்போதுமே தேவனுக்கு விரோதமான காரியத்தைச் செய்யக்கூடியவன். எனவே ஏவாளைப் போல பிசாசுக்கு இடங்கொடாமலும், செவிசாய்க்காமலும் இருப்போம் (எபே.4:27).

- தொடரும்

- மூன்றாம் உலகப்போருக்கு தயாராகும் நாடுகள் அவைகளை கைவிட ...
- மனித நேயம் உலகமெங்கும் வளர்ச்சியடைய...
- தேவனுடைய சித்தம் ஒவ்வொரு நாளும் பூமியிலே நடக்க...
- கர்த்தருடைய சபை எல்லா ஊரிலும் ஏற்பட...
- நமது மாத இதழுக்காக...
- நமது வேதாகம பள்ளி மாணவர்களுக்காக...
- தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக...



ஜெபியுங்கள்



மாத இதழுக்கான சந்தா செலுத்த இரு வழிகள்

The Word of Christ
Canara Bank A/c No.0946201000552
IFSC:CNRB0000946

India Post Payments Bank
ARJUNAN
048410018536
IPOS0000001

சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதி.2:17). "பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்றதுணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார் (வச.18). அதன்படியே மனுஷியை உண்டாக்கி அவனுக்கு ஏற்றதுணையாகக் கொடுத்தார். எவ்வளவு அற்புதமான திட்டம் இது! எல்லா பெற்றோரும் தன்னுடைய பிள்ளைகளுக்கு சகல ஆசீர்வாதங்களை சவதரித்து வைத்து அதை அவர்கள் அநுபவித்து ஆண்டுகொள்ளவும், மகிழ்ச்சியாக இருக்கவும் விரும்புகின்றனர், ஆனால் இவர்களைக் காட்டிலும் மேலான அன்பும் ஆசீர்வாதமும் அருளுகிறவர் தான் நம்மை உண்டாக்கின கர்த்தர். இப்பேர்பட்ட தேவனாகிய கர்த்தரின் விருப்பப்படி ஆதாமும் ஏவாளும் நடந்து கொண்டனரா? அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனரா? இல்லை. பூமிக்கு சாபத்தைக் கொண்டுவந்தனர். இவர்களின் கீழ்ப்படியாமை நமக்கு ஒரு சில பாடங்களைக் கற்றுக்கொடுக்கின்றது. பார்ப்போம்.

முதலாவதாக **கீழ்ப்படியாமை** நம் வாழ்க்கையைக் கடினமாக்கி விடுகிறது. ஆம், நாம் சரியானதைச் செய்யாதபோது நம் வாழ்க்கை கடினமாகிறது.

### Life gets tougher when we do not do what is right:

ஆதாம் சரியானதைச் செய்யவில்லை. அதாவது கர்த்தரிட்ட கட்டளையை மீறினான். எவ்வாறு? தன் மனைவியின் வார்த்தைக்குச் செவிகொடுத்தான். தேவன் புசிக்க வேண்டாம் என்று விலக்கின கனியைப் புசித்தான். "பின்பு அவர் ஆதாமை நோக்கி: நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவி கொடுத்து, புசிக்க வேண்டாமென்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்" (ஆதி.3:17) என்றார். அன்பு சகோதரியே, ஏற்றதுணையாக இருக்க வேண்டியவள் பூமிக்கே சாபம் வருவதற்குக் காரணமானாள். தேவன், செய்யக்கூடாது என்று சொல்லிய காரியத்தை தானும் செய்து, தன் புருஷனையும் செய்யப்பண்ணி மீறுதலுக்கு உட்பட்டாள். இதைத் தான் வேதம், "....ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" (1தீமோ.2:14) என்று கூறுகிறது.

இன்றும் அநேக குடும்பங்களில் இவ்வாறான காரியங்கள் நடந்து கொண்டேதான் இருக்கிறது. காரணம், ஸ்திரீகளாகிய நமக்குள் இருக்கும் இச்சை. அன்று ஏவாள் விலக்கப்பட்ட "அந்த விருட்சம் இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி.3:16). நாமும் உலகத்தின் பொருட்களின் மேலும் பல்வேறு உலகக் காரியங்களின் மேலும் நம் கண்களைப் பறக்க விட்டு இச்சிக்கிறோம், மற்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்து நமக்குத் தேவையில்லாத வற்றையெல்லாம் இச்சித்து நம் வாழ்க்கையைக் கடினமானதாக்கிக் கொள்ளுகிறோம். "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்" (யாக்.1:4) என்ற வசனத்தின்படி ஆகிறது. நாம் எந்த நிலையிலிருந்தாலும் திருப்தியாக இருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். தேவன் ஆதாம் ஏவாளுக்கு எல்லாவற்றையும் கொடுத்திருந்தார். அதைப்போலவே



உண்டாக்கினவரை மறந்து அவரை விட்டு விலகும்போது அநேக ஆசீர்வாதங்களை நாம் இழக்கநேரிடும். தன் ஸ்தானத்தை விட்டு அலைகிற ஒரு குருவியைப்போலவே இருப்போம். உங்களுடைய நிலைமை எப்படிப்பட்டதாயிருக்கிறது? உன் தேவனைப் பற்றிக்கொண்டிரு கர்த்தர் காரியங்களை வாய்க்கச்செய்வார். அவர்மேல் இருக்கும் நம்பிக்கையை விட்டுவிடாதே! "வழியை விட்டு விலகுகிறவனுக்குப் புத்திமதி விசனமாயிருக்கும்; கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவன் சாவான்" என வேதம் எச்சரிக்கிறது (நீதி.15:10). இஸ்ரவேலர் பலமுறை எச்சரித்தும் கீழ்ப்படியாமல் போனார்கள் அதினால் அநேகருடைய சவங்கள் வனாந்தரத்திலே விழுந்தது. எஸ்றா என்ற தேவமனிதன் ஜனங்களை காக்க உபவாசம் கூறினான். அதை ஏற்றுக்கொண்டவர்கள் அந்த உபவாசத்தில் கலந்துகொண்டார்கள். இதை ஏற்க மறுத்தவர்கள், அவரை விட்டு விலகினவர்கள் மேல் அவருடைய கோபம் இருந்ததாக எஸ்றா சொல்லுகிறார். "எங்கள் தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார்மேலும் அவர்களுக்கு நன்மையாக இருந்ததென்றும், அவருடைய வல்லமையும் அவருடைய கோபமும் அவரை விட்டு விலகுகிறவர்கள் எல்லார்மேலும் இருக்கிறதென்றும், நாங்கள் ராஜாவுக்குச் சொல்லியிருந்தோம்" என்கிறார் (எஸ்றா8:22). கர்த்தரை விட்டு விலகுகிற யாவர்மேலும் கர்த்தருடைய கோபம் இருக்கிறது. அவர்கள் அழிவின் பாத்திரமாக இருக்கிறார்கள்.

தேவனை விட்டு விலகி எங்கே போகிறார்கள்? வீணான விக்கிரகங்களை நாடும்படியாக போகிறார்கள். விக்கிரகமானது ஒன்றுமில்லை என்றும் அவைகள் மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட பொருளாயிருக்கிறதென்றும் மனதார அறியாமலிருக்கிறார்கள். அந்தப்படியாக; "அவர்கள் என்னைவிட்டு அந்நிய தேவர்களுக்குத் தூபங்காட்டி, தங்கள் கைகளின் கிரியையைப் பணிந்துகொண்ட அவர்களுடைய சகல தீமைகளினிமித்தமும் நான் என் நியாயத்தீர்ப்புகளை அவர்களுக்கு விரோதமாகக்கூறுவேன்" என்றார் (எரே.1:16). தேவன் விக்கிரக ஆராதனை செய்கிறவர்களை தண்டியாமல் விடார். அவருடைய நியாயத்தீர்ப்பு காத்திருக்கிறது. கர்த்தர் மோசேயை நோக்கி சொல்லும்போது; "நீ உன் பிதாக்களோடே படுத்துக்கொள்ளப்போகிறாய்; இந்த ஜனங்கள் எழும்பி, தாங்கள் போயிருக்கும் தேசத்திலுள்ள அந்நிய தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, என்னைவிட்டு, தங்களுடனே நான் பண்ணின உடன்படிக்கையை மீறுவார்கள். அந்நாளிலே நான் அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்களைக் கைவிட்டு, என் முகத்தை அவர்களுக்கு மறைப்பேன்; அதினால் அவர்கள் பட்சிக்கப்படும்படிக்கு அநேக தீங்குகளும் இக்கட்டுகளும் அவர்களைத் தொடரும்; அந்நாளிலே அவர்கள்; எங்கள் தேவன் நடுவே இராததினாலே அல்லவா இந்தத் தீங்குகள் எங்களைத் தொடர்ந்தது என்பார்கள்" (உபா.31:16,17). தேவன் தம்முடைய ஜனங்களை நேசித்து நல்ல வழிநடத்துனர்களை அவர்களுக்குக் கொடுத்தார். அந்த வழிநடத்துனர்கள் மரித்தபின்பு தாங்கள் விட்டுவிட்ட அந்த வீணான அல்லது அந்த தேசத்தின் ஜனங்களுடைய வீணான தேவர்களை நாட ஆரம்பித்தனர். இது இஸ்ரவேலின் தொடர்ந்த தொற்றுவியாதியைப்போன்ற ஒரு பாவமாக இருந்தது. இன்றைக்கும் கூட வழிநடத்துனர்கள் இல்லாவிட்டால் மந்தை சிதறடிக்கப்படுகிறது. அது வேதனைக்குரிய ஒரு விஷயமாகவே இருக்கிறது. தேவனுடைய அன்பையும் அவருடைய வழிநடத்துதல்களையும் பார்க்கும்போது; அவர் எவ்வளவாய் தம்முடைய ஜனத்தை நேசித்து அவர்களை தம்முடைய அற்புதமான கரத்தினால் வழிநடத்திக்கொண்டு வந்திருக்கிறார் எனக்

காணமுடிகிறது. இப்படிப்பட்ட ஜீவனுள்ள தேவனை மறந்தவர்களை தேவன் ஒருபோதும் மன்னிக்கமாட்டார். அவர் தமது பரிசுத்தவான்களைக் காப்பாற்றுகிறார். அவருடைய சமுகம் அப்படிப்பட்டவர்களுக்கு முன்பாக செல்கிறது. மோசேயோடும் யோசுவாவோடும் அவருடைய அற்புத கரம் இருந்தது. இஸ்ரவேலரை அவர்கள் இருக்கும் நாட்களில் அற்புதமாக வழிநடத்திக்கொண்டுவந்தார்கள். இன்றைக்கும் அந்தவிதமான தேவனுடைய ஊழியக்காரர்கள் மந்தைக்கு மாதிரியாக இருந்துகொண்டு செயல்படுகிறார்கள். அவர்களோடு கர்த்தருடைய கரம் இருக்கிறது. அவர்கள் வேதாகமத்தை வைத்துக்கொண்டு மந்தையை சரிசெய்துகொண்டு வழிநடத்துகிறார்கள். அப்படிப்பட்ட பரிசுத்தவான்களை கர்த்தர் கைவிடுகிறதில்லை.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு பரிசுத்தவானாக இருக்கின்றீர்களா? அப்படியிருப்பீர்களானால், பிதாவாகிய தேவன் உங்களோடு இருப்பார். மோசேயோடும் யோசுவாவோடும் இருந்த கர்த்தர் உங்களோடும் இருந்து உங்களை வழிநடத்துவார். அவர் உங்களோடு இருக்கும்போது நீங்கள் பயப்படவேண்டியதில்லை. அவரை விட்டு விலகாமலிருக்க நீங்கள் வேதத்தை நேசியுங்கள். கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று சோதித்துப்பாருங்கள். அவருக்குப் பிரியமாயிருக்க நாடுங்கள். உங்களில் இருக்கும் வீணான பாவத்தையும், பாவத்தை தூண்டுகிற காரியங்களையும் உங்களை விட்டு களைந்துபோடுங்கள். பாவத்தோடு கர்த்தரைப் பின்பற்ற முடியாது. உங்களை சுத்தவானாகக் காத்துக்கொள்ளும்போது பரிசுத்தமுள்ள கர்த்தர் உங்களோடு இருப்பார்.

**கர்த்தருடைய வழியை விட்டு விலகுகிறவர்கள் மனந்திரும்பும்போது அவர்களை கர்த்தர் மன்னிப்பாரா?**

கட்டாயம் மன்னிப்பார். "துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்; அவர் அவன்மேல் மனதுருகுவார்; நம்முடைய தேவனிடத்திற்கே திரும்பக்கடவன்; அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்" (ஏசா.55:7). தேவன் மன்னிப்பதற்கு கிருபை பொருந்தின தேவனாயிருக்கிறார். அவர் ஆதிமுதலாக மனிதனை மன்னித்துக்கொண்டே வருகிறார். மனந்திரும்புகிறவர்கள் அவரிடம் மன்னிப்பைப்பெற்று இரட்சிக்கப்படுகிறார்கள். மனந்திரும்பாமற்போன வணங்கா கழுத்துள்ளவர்கள் மாண்டுபோனார்கள் என்று பார்க்கிறோம். ஒவ்வொரு நாளும் தம்முடைய ஜனங்கள் மனந்திரும்பவேண்டும் என்று தேவன் எதிர்பார்த்துக்கொண்டே நாட்களை கூட்டி வழங்கிக்கொண்டு வருகிறார். அதினாலே வானமும் பூமியும் இன்றும் நிலைத்திருக்கிறது. இல்லையென்றால் என்றோ சோதோம் கோமோராவைப்போல அழிந்துபோயிருக்கும். ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பவேண்டும் என்று நம்மில் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் எனக் காண்கிறோம்.

இன்றே உங்களுக்கு ஒரு மனந்திரும்பக்கூடிய வாய்ப்பை தேவன் ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறார். இன்றே இரட்சணிய நாள் இன்றே மனந்திரும்பி கிறிஸ்துவின் சுவிசேஷ வசனத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படுங்கள். அப்பொழுது உங்களுடைய நாமங்கள் ஜீவ புத்தகத்திலே எழுதப்படும். மேலும், கர்த்தருக்கு சாட்சியாக வாழுங்கள். அப்பொழுது இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.





பெண்கள் பகுதி

## ஆதாமும் ஏவாளும்

### Adam and Eve

*-Glory Arjunan*

ஆதியிலே வானத்தையும் பூமியையும், அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஒரே தேவன், கடைசியாக ஆறாம் நாளிலே ஆதாமை அதாவது முதல் மனுஷனையும் முதல் மனுஷி ஏவாளையும் உண்டாக்கினார். பரிசுத்த வேதாகமம் ஆதியாகமம் 1ம் அதிகாரத்தில் "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக;..." (ஆதி.1:26) என்று சொல்லி "தேவன் தம்முடைய சாயலாக மனஷனைச் சிருஷ்த்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்" (ஆதி.1:27) என்றும் சொல்லுகிறது. இந்த ஆதாம் தேவனால் உண்டாக்கப்பட்ட தேவனுடைய குமாரன் (the son of God) (லூக்.3:38) என்று சொல்லப்படுகிறது.

பொதுவாக ஒரு குடும்பத்தில் முதன் முதலாக ஒரு குழந்தை பிறந்ததென்றால் அந்த குடும்பமே மகிழ்ச்சியடையும். அதைப்போலவே தேவன் இந்த முதல் மனுஷனை உண்டாக்கின பின்பு அது நல்லது என்று கண்டார். இப்படியாக தம் சாயலின்படியேயும் தம் ரூபத்தின்படியேயும் உண்டாக்கப்பட்ட மனுஷனுக்கு ஒரு உரிமையையும் கொடுத்தார் அது என்ன உரிமை? தாம் உண்டாக்கின எல்லாவற்றிற்கும் பெயர் வைக்கும் உரிமை. ஆம், "தேவனாகிய கர்த்தர் வெளியின் சகல வித மிருகங்களையும், ஆகாயத்தின் சகல விதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டுவந்தார்; அந்தந்த ஜீவஜந்துக்கு ஆதாம் எந்தெந்தப் பேரிட்டானோ அதுவே அதற்குப் பேராயிற்று" (ஆதி.2:19). அது மாத்திரமல்ல. தேவன் ஆதாமுக்கு ஏற்றதுணையாக இருக்கும்படி உண்டாக்கின பெண்ணை மனுஷி என்னப்படுவாள் என்றும் சொல்லி (ஆதி.2:23), "ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்;" என்று (ஆதி.3:20) வாசிக்கிறோம். தேவன் தாம் உண்டக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது.

இத்தனை அழகாக உண்டாக்கப்பட்ட முதல் தம்பதியை தேவன் அப்படியே விட்டுவிடவில்லை; அவர்களுக்கென்று ஒரு சந்தோஷமான இனிமையான ஒரு இடத்தையும் உண்டாக்கி அங்கே வைத்தார் என்று வேதம் சொல்லுகிறது. எதற்காக? "தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்" (ஆதி.2:15). அத்தோடுகூட, "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்" (ஆதி.2:16) என்ற சுதந்தரத்தையும் கொடுத்து, ஒரு கட்டளையையும் அவனுக்குக் கொடுத்தார். அது என்ன கட்டளை? "ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருடசத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே

**நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?**

புதிய ஏற்பாட்டில் ஒரு சபை அல்லது ஜனக்கூட்டம் விசாலமானதும் குறுகலானதுமான வழியாக அடையாளப் படுத்தப்படுகிறது. என்னோடு வாசியுங்கள்.

▶ சவுல் அதிகாரமுள்ளவர்களின் நிருபத்தைக் கேட்டு வாங்கினான். ''இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி...'' (அப்.9:2) எனவே, துன்புறுத்தப்பட்டவர்களாயிருந்த இந்த மார்க்கத்தார், நிருபத்தில் எழுதப்பட்டவர்களாகவும், அடையாளங்காணக்கூடியவர்களாவும் இருந்தார்கள்.

▶ ''அக்காலத்திலே இந்த மார்க்கத்தைக் குறித்த பெரிய கலகம் உண்டாயிற்று'' (அப்.19:23). எபேசுவில் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்துச் சம்பாஷணை பண்ணி, புத்திசொல்லிக்கொண்டு வந்தபோது சிலர் பவுலுக்கு செவி கொடுத்தார்கள், ஆனால் சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகி, அவர்கள் ''.... கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தார்கள்'' (அப்.19:8,9). எனவே, ஜனங்கள் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்து அவர்கள் பிரசங்கித்ததை புறக்கணித்து, அந்த மார்க்கத்தை நிந்தித்தார்கள். நீண்ட நாட்களாக வர காத்திருந்த ராஜ்யம் அந்த மார்க்கமாகிய, சபையாக இருந்தது.

▶ பவுல், ''உம்மிடத்தில் ஒன்றை ஒத்துக்கொள்ளுகிறேன்; அதென்னவென்றால், இவர்கள் மதபேதம் என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்து...'' (அப்.24:14) என்றான். எனவே, பவுல் இந்த மார்க்கத்தின் தனிப்பட்ட விதத்திலும், அடையாளங் காணத்தக்க விதத்திலும் தேவனை ஆராதித்த மக்கள் சபையின் ஒரு அங்கமாக இருந்தான்.

**நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?**

இயேசு, ஜீவனுக்கு நேராய் வழி நடத்துகிற ஒரே ஒரு வழியையும், அவரே அந்த வழி என்றும் கூறினார். அந்த மார்க்கத்தைப் பின்பற்றின ஆதிக்கிறிஸ்தவர்கள் பிரபலமாயிருக்கவில்லை; அவர்கள் பிரசங்கித்த கோட்பாடும் பிரபலமாயிருக்கவில்லை; அவர்கள் கர்த்தர் போதித்தவற்றை பிரசங்கித்ததினால் அவர்கள் வெறுக்கவும், துன்புறுத்தவும்பட்டார்கள்; பல வழிகள் இல்லை; ஏற்றுக்கொள்ளப்படதக்க மதங்கள் இல்லை; பல சபைகள் இல்லை; இரட்சிக்கப்படுவதற்குப் பல வழிகள் இல்லை; தேவனை ஆராதிப்பதற்குப் பல வழிகள் இல்லை. இயேசு போதித்தார், மேலும் கிறிஸ்தவர்கள் போதித் தார்கள் ''ஒரே ஒரு வழியை'' மட்டும்.

இயேசு சொன்னார்: ''நான் என் சபையைக் கட்டுவேன்... என்று (மத்.16:18). பவுல் எழுதினார். பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின் மூலம் ''...கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்த மாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார்'' (எபே.5:25-27) என எழுதினான்.

இயேசு, தம்முடைய ஜனமாகிய, தம்முடைய ராஜ்யமாகிய, தம்முடைய மணவாட்டியாகிய தம்முடைய சபைக்குத் திரும்பவும் வருவதாக வாக்களித்தார் (வெளி.22:12, யோவா.14:3, மத்.25:31-46). நீங்களும் நானும் ''அந்த மார்க்கத்தில் இருப்போமா?



# லஞ்சம் – Bribery

-J.C.Choate



இந்தப் புத்தகத்திலுள்ள பாடங்களின் நோக்கம், கிறிஸ்து இயேசுவில் நீதியின் புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளுவதற்காக பழைய பாவ மனிதனைக் களைந்து போடுவதற்கான ஞானத்தை உங்களுக்குக் காண்பிப்பதாகும். நாம் நமது நாளின் சில சமூகத் தீமைகளைப் பற்றி விவாதித்து, இவைகளை நமது வாழ்வில் இருந்து அகற்றி, நமது வாழ்வை சிறப்பாக மாற்றக்கூடியதும் மற்றும் நமது கர்த்தருடைய நித்திய வாழ்வை உறுதிசெய்யக் கூடியதுமான நற்காரியங்களை மீண்டும் கொண்டுவரும்படி உற்சாகப் படுத்துகின்றோம்.

லஞ்சம்! இது ஏதோ ஒரு வகையில் எல்லா ஜனங்களின் வாழ்வினை பாதிக்கின்ற இன்றைய நாளின் தீமை என்று நிச்சயமாக என்னோடு ஒப்புக்கொள்ளுவீர்கள். அதற்கு நாம் என்ன செய்யமுடியும்? அதை நாமே ஒழித்துக்கட்ட ஏதேனும் நம்பிக்கையுள்ளதா?

லஞ்சம் என்றால் என்ன? இது வெறுமனே அதிகாரத்தில் உள்ள ஒருவருக்கு மதிப்புமிக்க ஒன்றைக் கொடுப்பதாகும். அதனால் அவர்கள் லஞ்சம் கொடுக்கும் ஒருவரின் நலனுக்காக ஒரு சட்டத்தை அல்லது, ஒரு விதியை ஒதுக்கி வைப்பார்கள். அநேகர் சில சட்டமீறுதலுக்காக ஒரு பெரிய அபராதத் தொகையைச் செலுத்துவதிலிருந்து தங்களை தப்புவித்துக் கொள்ள ஒரு காவலருக்கு (Policeman) லஞ்சம் கொடுக்கிறார்கள். பெற்றோர்கள் மதிப்புமிக்கப் பள்ளிகளில் தங்களுடைய குழந்தைக்கு ஒரு இடம் பெறும்படி அந்தப் பள்ளியிலோ அல்லது கல்லூரியிலோ கட்டணம் செலுத்துகின்றனர். பலர் ஒரு வேலையைப் பெற நிர்ணயித்த கட்டணத்தை செலுத்துகின்றனர் மேலும் நிச்சயமாக பல்வேறு, பலவகையான லஞ்சங்கள் காணப்படுகின்றன. நிச்சயமாக இது சரியானதல்ல. இதனால் அரசாங்கத்தைக் கொள்ளையடித்து பாதிக்கப்பட்டவர்களை புண்படுத்துகின்றனர். உண்மையாக குறைந்த சதவீத மக்கள் மட்டுமே இதிலிருந்து பலனடைகின்றனர், இருந்தபோதிலும் பலர் இதில் ஈடுபடுகின்றனர். அரசாங்கம் ஈடுபடலாம், ஆனால் மருத்துவ பணியாளர்களும், பணக்காரர்களும் ஏழைகளும் இளைஞர் மற்றும் வயதானவர்களும் இதுபோன்ற அநேகமாக மற்றவர்களும் இதில் ஈடுபடலாம். எவரையாவது நான் விட்டுவிட்டேனா?

லஞ்சம் கொடுப்பதில் இருக்கும் ஒரு பிரச்சனை என்னவென்றால்; மக்கள் போதுமான அளவிற்கு பணம் வைத்திருக்கும் போது அவர்கள் தங்களுடைய அனுகூலத்திற்காக அடிக்கடி தங்கள் பணத்தை பயன்படுத்த முயலுவார்கள், மேலும் அந்த குற்றத்திற்காக கொடுக்கும் லஞ்சமானது இதைப் பெறும் அதிகாரத்திலுள்ள ஒருவரை உற்சாகமூட்டுவது மட்டுமல்லாது, தொடர்ந்து அதனை எதிர்பார்க்கிறவராகவும் மாற்றுகிறது. பொதுவாக ஜனங்கள் லஞ்சம் கொடுப்பதை நிறுத்துவார்களானால், அதிகாரத்தில் உள்ளவர் இதனிமித்தம் சோதனைக்கு இடமளிக்க மாட்டார்கள், அத்துடன் பிரச்சனையும் முடிவுக்கு வரும்.

லஞ்சத்தை ஊக்கப்படுத்தும் இன்னொரு பிரச்சனை என்னவென்றால்; சில சமயங்களில் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறதென்று சில பணியாட்கள் சில கூடுதல் சம்பளத்தை நாட வேண்டிய கட்டாய உணர்வினை அடையலாம். ஆனபடியினால், அவர்கள் லஞ்சம் வாங்கும் நிலையில் இருந்தால், அவர்கள் சோதனைக்கு இடமளிக்கும் அளவுக்கு பலவீனமாக இருக்கலாம். கண்டிப்பாக சம்பளம் போதாது என்றும் இவர்கள் லஞ்சம் வாங்கும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்றும் அறிவார்கள். அவர்கள் தங்களுக்குக் கீழாக உள்ளவர்கள் லஞ்சங்களைப் பெறும்போது அவர்களும் தங்களுடைய பிடித்தங்களைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளது என்பதையும் அறிவார்கள்.

லஞ்சம் வாங்குவது ஒன்றும் புதிதல்ல, எனினும் வேதவாக்கியங்களில் கூட இதுகுறித்து நாம் படிக்கிறோம். சாமுவேல் தேவனுடைய ஒரு பெரிய தீர்க்கதரிசி என்று அறிவுறுத்தப்படுகிறோம். அநேக நற்காரியங்கள் அவனைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது, ஆனாலும் அவன் தன் பிள்ளைகளுடனான பிரச்சனைகளை உடையவனாயிருந்தான். நாம் "சாமுவேல் முதிர்வயதானபோது, தன் குமாரரை இஸ்ரவேலின்மேல் நியாயாதிபதிகளாக வைத்தான். அவனுடைய மூத்த குமாரனுக்குப் பெயர் யோவேல், இளையவனுக்குப் பெயர் அபியா; அவர்கள் பெயெர்செபாவிலே நியாயாதிபதிகளாயிருந்தார்கள். ஆனாலும் அவனுடைய குமாரர் அவன் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி, நியாயத்தைப் புரட்டினார்கள்" (1சாமு.8:1-3). லஞ்சம் கொடுக்கப்பட்டு கெடுத்துவிடப்பட்ட சாமுவேலின் குமாரரின் வழியோ அது ஒரு கவலைக்குரிய விமர்சனம் ஆனால் வேதாகமத்தைக் குறித்ததான அற்புதமான காரியம் - தேவனிடமிருந்து வந்த ஆதாரங்களில் ஒன்று - இது ஒரு மனிதனுடைய நல்ல மற்றும் கெட்ட பழக்கங்கள் மற்றும் தேவன் அவனை எவ்வாறு கையாண்டார் என்பதை பற்றி கூறுகிறது.

சாமுவேலின் குமாரர் வழிமாறின போதிலும் குறைந்தபட்சம் அவன் ஒரு நல்ல மனிதனாக இருந்தான் மேலும் அவன் மக்களை எதிர்கொண்டபோது, அவர்கள் அதை ஒப்புக்கொள்ளவேண்டும். "அப்பொழுது சாமுவேல் இஸ்ரவேலர் அனைவரையும் நோக்கி: இதோ, நீங்கள் எனக்குச் சொன்னபடியெல்லாம் உங்கள் சொற்கேட்டு உங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தினேன். இப்போதும் இதோ, ராஜாவானவர் உங்களுக்கு முன்பாகச் சஞ்சரித்துவருகிறார்; நானோ கிழவனும் நரைத்தவனுமானேன்; என் குமாரர் உங்களோடிருப்பார்கள்; நான் என் சிறுவயதுமுதல் இந்நாள்வரைக்கும் உங்களுக்கு முன்பாகச் சஞ்சரித்துவந்தேன். இதோ, இருக்கிறேன்; கர்த்தரின் சந்நிதியிலும் அவர் அபிஷேகம் பண்ணிவைத்தவருக்கு முன்பாகவும் என்னைக் குறித்துச் சாட்சி சொல்லுங்கள்; நான் யாருடைய எருதை எடுத்துக்கொண்டேன்? யாருடைய கழுதையை எடுத்துக் கொண்டேன்? யாருக்கு அநியாயஞ்செய்தேன்? யாருக்கு இடுக்கண்செய்தேன்? யார் கையிலே பரிதானம் வாங்கிக்கொண்டு கண்சாடையாயிருந்தேன்? சொல்லுங்கள்; அப்படியுண்டானால் அதை உங்களுக்குத் திரும்பக் கொடுப்பேன் என்றான். அதற்கு அவர்கள்: நீர் எங்களுக்கு அநியாயஞ் செய்யவும் இல்லை; ஒருவர் கையிலும் ஒன்று வாங்கவும் இல்லை என்றார்கள். அதற்கு அவன்: நீங்கள் என்



பெரும்பான்மையோருடைய பாதை நம்மைக் கவர்ந்திருக்கிறதா? நம்முடைய பெற்றோர்களின் தெரிந்தெடுத்தல் நம்முடையதாக இருக்கின்றதா? மனிதரால் ஆரம்பிக்கப்பட்ட மதங்களை நாம் பின்பற்றுகிறோமா? நம்மருகிலுள்ள பிரிவினை சபை நம்மை திருப்திப்படுத்துகிறதா? எந்த ஒரு சமயக்கோட்பாடுமின்றி நம்முடைய சுயநன்மைகளில் நாம் போதுமான அளவு நல்லவர்களாக இருக்கிறோம் என நாம் தீர்மானிக்கிறோமா?

**இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?**

வேதாகமம் கூறுகிறது: "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி.14:12).

"கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல வென்றும், தன் நடைகளை நடத்துவது நடத்துகிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்" (எரே.10:23).

இயேசு "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா.14:6) என்று கூறினார்.

அவர் மேலும் விளக்கினார், "நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்..." (யோவா.10:9) என விளக்கினார்.

இயேசு எதற்கு வாசலாக இருக்கிறார்? அவர் பதிலளிக்கிறார்: "நானே ஆடுகளுக்கு வாசல்... நானே நல்ல மேய்ப்பன் பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறது போலவும் நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னு டையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக் கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும். அவைகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோவா.10:7,14-16) என பதிலளிக்கிறார்.

மனிதர் பல வழிகள் உண்டென்றும், அவைகள் தாங்கள் விரும்பியவற்றை தெரிந்தெடுக்க எளிதாக இருக்கின்றது என்றும் தங்களுக்குள்ளாக சொல்லக்கூடும். ஆனால் தேவனுடைய குமாரனும் நமது இரட்சகருமாயிருக்கிற இயேசு இரண்டு வழிகள் மட்டுமே உண்டென்று கூறுகிறார். மனிதர் ஏற்படுத்தியிருக்கிற நூற்றுக்கணக் கானவைகள் அல்லது ஆயிரக்கணக்கானவைகள் அல்ல இரண்டு மட்டுமே. அவைகள்...

"இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்" (மத்.7:13,14).

**நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?**

- ▶ எத்தனை சத்தியங்கள் உள்ளன? ஒன்று
- ▶ எத்தனை இரட்சகர்கள் உள்ளனர்? ஒன்று
- ▶ எத்தனை வாசல்கள் உள்ளன? ஒன்று
- ▶ எத்தனை மேய்ப்பர்கள் உள்ளனர்? ஒன்று
- ▶ எத்தனை மந்தைகள் உள்ளன? ஒன்று
- ▶ எத்தனை வழிகள் ஜீவனுக்கென்று உள்ளன? ஒன்று

பெண்கள் பகுதி

# நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?

-Betty



நம்முடைய அடிப்படை நோக்கம் கிறிஸ்துவாகவும், அவர் நமக்கென்று உருவாக்கின பெரிய தியாகமாகவும் இருக்கவேண்டும் எனக்கூறிக்கொண்டு ஜனங்கள் சபையை மட்டுப்படுத்துகின்றனர்.

ஆனால், உண்மையில் தேவனுடைய முக்கிய நோக்கம் சபையே! வரலாற்றின் தொடர் ஓட்டத்தில், அவருடைய இலக்கு கிறிஸ்துவினுடைய மரணம் அல்ல ஆனால் அந்த மரணம் நிறைவேற்றிய மனிதருடைய ஆத்துமாக்களை தம்மிடத்திற்கு மீட்டுக் கொண்டதேயாம். சபையை பற்றி மாம்ச சரீரம் தேவனிடத்திற்கு மீட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கிறிஸ்து தாமே சபையை போஷித்தார். அவருடைய மரணமே ஆயுதம். இது தேவன் நாடிய இலக்கு! என விளக்குகிறது.

இல்லை, ஜீவனைக் கொடுக்கும்படி மரித்த ஒருவரை நாம் மட்டுப்படுத்தக்கூடாது. ஆனால் நாம் தேவனுக்கும் தமக்கென்று சபையை சம்பாதிக்கும்படிக்கு மேலான தியாகத்தைச் செய்த கர்த்தருக்கும் அதிக விலையேறபெற்ற கிரயத்தை மட்டுப்படுத்திய அந்த குற்ற உணர்வுடையவர்களாய் இல்லாமல் இருப்போமாக!

**நீங்கள் இதைப்பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?**

வாழ்ந்து கொண்டிருக்கிற ஒவ்வொரு மனிதனும் ஒரு வழியில் பயணம் செய்கின்றனர். சரீரப்பிரகாரமாக, நாம் ஜீவனிலிருந்து மரணத்துக்குப் பயணம் செய்கிறோம்.

நாம் பயணம் செய்கின்ற வழி ஒருவேளை ஆவிக்குரிய வாழ்விற்கு வழிநடத்தும் அல்லது ஆவிக்குரிய மரணத்திற்கு வழிநடத்தும், ஆனால் நாம் எல்லாரும் சேரவேண்டிய ஒரு இடத்தை அல்லது மறுமையை நோக்கிச் செல்லுகின்றோம் என்பது ஓர் தப்பித்துக்கொள்ள முடியாத உண்மை ஆகும்.

நாம் எந்த எல்லையைப் போய் சேருவோம்?

**நீங்கள் இதைப் பற்றி சிந்தித்திருக்கிறீர்களா?**

ஜனங்கள், அநேகமாக அனைவரும் நாம் ஆயிரக்கணக்கான வழிகளில் பயணம் செய்வோம் என தீர்மானிக்கின்றனர். அவர்களுடைய தெரிந்தெடுத்தல் எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துகிறதில்லை என நினைக்கின்றனர். ஆனால் அவை வித்தியாசத்தை ஏற்படுத்துகிறது. உண்மையிலேயே நமது தெரிந்தெடுத்தலானது வாழ்வின் முடிவில் நமது ஆவிக்குரிய வாழ்வைக் கண்டு கொண்டோமா அல்லது மரணத்தைக் கண்டு கொண்டோமா எனத் தீர்மானிக்கும்.

நாம் தேவர்களையும், பழங்கால மதச்சடங்காசாரங்களையும் பின்பற்றலாமா? நாம் மத அனுசரணை முறையையும், தியானத்தால் உண்மையையும், பரம்பொருளையும் காணலாம் என்ற கொள்கையையும் தெரிந்து கொள்ளுகிறோமா?



கையில் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை என்பதற்குக் கர்த்தர் உங்களுக்கு எதிராக சாட்சியாயிருக்கிறார்; அவர் அபிஷேகம் பண்ணினவரும் இன்று அதற்குச் சாட்சி என்றான்; அதற்கு அவர்கள்; அவர் சாட்சிதான் என்றார்கள்" (1சாமு.12:1-5). சங்கீதக்காரன் "அவர்கள் கைகளில் தீவினையிருக்கிறது; அவர்கள் வலதுகை பரிதானங்களால் நிறைந்திருக்கிறது. நானோ என் உத்தமத்திலே நடப்பேன்; என்னை மீட்டுக்கொண்டு என்மேல் இரக்கமாயிரும்" (சங்.26:10,11) என்றான். ஆமோஸ், தேவனுடைய தீர்க்கதரிசி, தன்னுடைய நாளில், "உங்கள் மீறுதல்கள் மிகுதியென்றும், உங்கள் பாவங்கள் பலத்ததென்றும் அறிவேன்; நீதிமானை ஒடுக்கி, பரிதானம் வாங்கி, ஒலிமுகவாசலில் ஏழைகளின் நியாயத்தைப் புரட்டுகிறீர்கள்" (ஆமோ.5:12) என்கிறான்.

**– தொடரும்**

**வாசகரின் அன்புக் கடிதம்...**

*பொருள்: அய்யா! கடந்த மே மாத தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் இதழும், இம்மாத ஜூன் இதழும் இன்னும் வரை வரவில்லை. கர்த்தரின் பணியில் அய்யா அவர்களுக்கு இயேசுவின் நாமத்தில் தோத்திரம் கூறி எழுதும் கடிதம்.*

*அய்யா, பொருளில் கண்டபடி இதழ்கள் வரவில்லை. ஒவ்வொரு மாதமும் 13ம் நாளுக்குள் கிடைக்கும். உடன் அனுப்பி உதவுங்கள்.*

***தங்களின் இதழ் வாசகன், அதிசயம்.*** **(Ref No. VRN/73)**

***ஆசிரியர் கடிதம்...***

வாசகர் அனைவருக்கும் ஒவ்வொரு மாதமும் 10ம் தேதி மாதஇதழை அனுப்பிவைக்கிறோம். எமது மாத இதழ் வரவில்லையென்றால் தயவுசெய்து உங்கள் Postman னிடம் விசாரிக்கவும். உங்களுடைய முகவரி மாற்றம் இருந்தால் உடனே உங்கள் முகவரியில் உள்ள Ref. No. குறிப்பிட்டு தெரியப்படுத்தவும்.

நன்றி – ஆசிரியர்

***100 பேருக்கு நமது மாத இதழை அறிமுகம் செய்து அவர்களுடைய முகவரியை எழுதி அனுப்புகிறவர்களுக்கு***




***அனுப்பி வைக்கப்படும். இன்றே எழுத ஆரம்பியுங்கள்...***

## நான் யார்? – Who Am I?

- நான் கப்பர் நகூமைச் சேர்ந்தவன்
- யூதரை நேசித்து ஜெபஆலயம் கட்டிக்கொடுத்தேன்
- யூதருடைய மூப்பரை கருத்தாய் வேண்டிக்கொண்டேன்
- என் வேலைக்காரனுக்காக
- எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகர் உண்டு
- இயேசுவை நீர் என் வீட்டின் வாசலுக்குள் வர நான் பாத்திரனல்ல என்றேன்
- இயேசு என் விசுவாசத்தைப் பார்த்து இஸ்ரவேலுக்குள்ளும் இப்படியில்லை என்றார்



**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**

**ஆம் எனில் ☑ குறியிடவும்**



**தற்சோதனை பகுதி - 46**

## 46. இயேசுவின் புதிய கட்டளை என்ன?

1. நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் ☐ வசன ஆதாரம் ----------------------------------
2. ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே அவருடைய கற்பனையல்ல ☐ வசன ஆதாரம்----------------------------------
3. என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள் என்றார் ☐ வசன ஆதாரம்-------------------
4. இயேசுவின் சீஷர்கள் என்று அறிந்துகொள்ள ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டியதில்லை ☐ வசன ஆதாரம் -----------------
5. தேவன் நம்மிடத்தில் அன்புகூர்ந்து... தமது குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டானது ☐ வசன ஆதாரம்---------------------------
6. அன்பில்லாதவனும் தேவனை அறிவான் ☐ வசன ஆதாரம்----------
7. தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டும் ☐ வசன ஆதாரம்----------------------------------
8. தன் சகோதரனைப் பகைத்தால் அவன் பொய்யையல்ல மெய்யைப் பேசுகிறான் ☐ வசன ஆதாரம்----------------------------------
9. அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல ☐ வசன ஆதாரம்-
10. தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனல்ல ☐ வசன ஆதாரம்---------------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**

**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**

**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**

**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**






**விசுவாசமும் விசுவாச வீரர்களும்**

**பாடம்: 4** Faith and Faithful Knights

- K.R.K.Ravi Asir

**விசுவாச வீரன் ஆபேல் – Abel, Warrior of Faith**

"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்; அவன்மரித்தும் இன்னும் பேசுகிறான்" (எபி.11:4).


காயீன், ஆபேல் இருவருமே ஆதாமின் குமாரர்களாயிருந்தார்கள். ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனாயிருந்தான். சில நாட்களுக்கு பின்பு காயீன் நிலத்தின் கனிகளை கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டு வந்தான். ஆபேல் தன் மந்தையின் தலையீற்றுகளிலும், அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். காயீனையும் அவன் காணிக்கைகளையும் அவர் அங்கீகரிக்கவில்லை. இதனால் காயீனுக்கு மிகவும் எரிச்சல் உண்டாகி, அவன் முகநாடி வேறுபட்டது ஆகையால் தேவன் அவனை எச்சரித்தார். ஆனாலும் காயீன் ஆபேலோடே பேசினான். அவர்கள் வயல் வெளியில் இருந்த பொழுது காயீன் ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி அவனைக் கொலை செய்தான். கர்த்தர் ஆபேலைக் குறித்து காயீனிடம் கேட்ட பொழுது அவன் "நான் அறியேன்; என் சகோதரனுக்கு நான் காவலாளியோ" என்றான். அதற்கு அவர்: என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது என்றார் (ஆதி.4:1-10). அதைத்தான் எபிரெய நிருப ஆசிரியர் "அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்து தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" என்று குறிப்பிட்டிருக்கிறார் (எபி.11:4)

தன் சகோதரனைப் பகைக்கிறவன் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான். ஆகையால் காயீன் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும் பாக்கியத்தை இழந்து போனான் (1யோவா.4:15). காயீன், ஆபேல் மீது எரிச்சல் கொண்டதற்கு பொறாமை தான் காரணம் என்பது நமக்கும் தெளிவாகத் தெரிகிறது. "ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான். தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலை கொண்டிருக்கிறான்" (1யோவான் 2:9-10).

"கோபம் மூடனைக் கொல்லும்; பொறாமை புதியில்லாதவனை அதம்பண்ணும்" (யோபு 5:2). எனவேதான் காயீன் பொறாமையின் காரணமாகவே தனக்கு அழிவைத் தேடிக்கொண்டான். தேவனிடத்திலும் அவன் பொறுப்பற்றவகையில் பேசினான், "துன்மார்க்கன் நீதிமான்மேல் கண்வைத்து அவனைக் கொல்ல வகைதேடுகிறான்" என்று சங்.37:32 சொல்கிறது. ஆபேல் நீதிமானயிருந்தபடியினால் காயீன் அவன்மேல் கண்வைத்து அவனை கொல்லவகை தேடினான். மல்கியா 1:8,9 வசனங்களிலே அசுத்தமான அப்பம் மற்றும் கண் ஊனமான, மற்றும் காலூனமான நசல்பிடித்த மிருகவகைளை பலியிடுவதைக் குறித்து பேசப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஜனங்கள் தேவனை வார்த்தைகளினாலே வருத்தப்படுத்தினார்கள். இதே விதமாகத் தான் காயீனும் நடந்து கொண்டான். அவன் தேவனுக்குப் பிரியமில்லாதவனாக நடந்து கொண்டான். ஏனென்றால் அவன் தேவனிடத்தில் விசுவாசமில்லாதவனாக இருந்தான். ஆனால் ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்கு செலுத்தினான். காரணம் ஆபேல் தேவனிடம் கொண்டிருந்த விசுவாசமே (எபி.11:4).

**- தொடரும்**

**INDIA POST**




**அறிந்து கொள்ளுவோம்**

## ஹிட்லர்

- ஜெர்மனியில் நாசிசக் கட்சியைத் தொடங்கியவர் ஹிட்லர்.
- அவர் ஆட்சியின் வேத புத்தகம் என்ற நூல் மெயின்காம்ப்.
- முதல் உலகப்போரில் அவர் பெற்ற பரிசு இரும்புச் சிலுவை.
- ஹிட்லர் வெறுத்தவை யூதர்கள் மற்றும் பொதுவுடமைவாதிகள்.
- ஹிட்லரின் பங்கு மிக முக்கியமாக இருந்த போர் இரண்டாம் உலகப்போர்.
- ஹிட்லர் அறிவித்த கொள்கை ஒரே மக்கள், ஒரே நாடு, ஒரே தலைவர்.
- ஐரோப்பா கண்டம் முழுவதையும் தன் கண்ணசைவில் வைத்தவர்.



## வேத அறிவுப்போட்டி 260–ன் விடைகள்

1. இஸ்போசேத் - 2சாமு.4:12
2. அக்கிரமக்காரரை - 2பேது.2:9
3. யெரொபெயாம் - 1இரா.12:29
4. பயமில்லை, பயத்தைப் - 1யோவா.4:18
5. மனாசே - 2இரா.21:7
6. இரட்சகரான தேவன் - யூதா 24
7. காத் - 1நாளா.21:10
8. பரலோகத்தில் - வெளி.22:5
9. சனகெரிப் - 2நாளா.32:21
10. ஊமையன் - மத்.9:33

**சரியான பதில் எழுதியவர்கள்**

1. S. சாந்தகுமாரி - நாசரேத்
2. D. அன்புக்கமலம் - காரைக்குடி
3. Mrs. பாலின்மார்ட்டின் - காரைக்குடி
4. Mrs. ஜெனிதர்மராஜன் - திருநெல்வேலி
5. A. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
6. Mrs. ரூபவல்யா - நாசரேத்
7. K. ராணிமூர்த்தி - எற்வாடி
8. P. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
9. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
10. A. டேவிட் ஜெயச்சந்திரன் - மதுரை
11. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி - திருச்சி
12. Mrs. வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
13. Mrs. ஃபிராங்களினா ஜான் - ஊட்டி
14. Mrs. மேரிநிர்மலா ஆபிரகாம் - மதுரை
15. J. மேரி ஜெயக்குமார் - மதுரை
16. Mrs. ஃபுளோரா சுந்தர் - மதுரை
17. Mrs. கஸ்தூரி - ஒட்டநத்தம்
18. R. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
19. R. அந்தோணியம்மாள் - கலுங்குவிளை
20. S. அசோக்குமார் - தூத்துக்குடி
21. Mrs. ஆலிவ் ஜெயாபாலன் - கோவை
22. Mrs. ஜெபாநியூட்டன் - திருநெல்வேலி
23. J. ஜான்சி - ஆனைமலை
24. S. ஜாய் சந்திரகாந்தா - நல்லூர்
25. Mrs. ஹெத்சி செல்வின் - சென்னை
26. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
27. D. விஜயா காந்தி - கூத்தம்பாக்கம்
28. Mrs. நவரத்தினம் ஞானராஜ் - நாசரேத்
29. R. கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
30. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
31. R. பாரதி - கோபி
32. Mrs. கிரேஸ் ஸ்டெல்லா பக்தர் - ஆதம்பாக்கம்
33. E. அதிசயம் - பனைகுடி
34. J. செல்வராஜ் - தூத்துக்குடி
35. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
36. C. அருள்ராஜ் - சென்னை
37. D. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி
38. J. இளவரசி ஜோபிதா - துடியலூர்
39. Mrs. சந்திராஆல்பர்ட் - திருநெல்வேலி
40. S. ஓசியா ஹரிராகவன் - திருவள்ளூர்
41. Mrs. ஜெயாபானிஜெயராஜ் - சென்னை
42. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் - திருநெல்வேலி
43. Mrs. ராஜம்மாள் மனோகரன் - பெங்களூர்

## வேத அறிவுப்போட்டி 261–ன் விடைகள்

1. தரியு - எஸ்றா 6:15
2. மாற்கு - மாற்.1:1
3. 52 - நெகே.6:15
4. பரிசேயர், நியாயசாஸ்திரிகள் - லூக்.7:30
5. அகாஸ்வேரு - எஸ்த.1:1
6. ஆம் - யோவா.20:30
7. யோபு - யோபு 27:1,2
8. பிலிப்பு - அப்.8:40
9. ஒரு ஆட்டு மந்தையைப்போல - சங்.77:20
10. உயிர்ப்பிப்பார் - ரோம.8:11

**சரியான பதில் எழுதியவர்கள்**

1. J. ஆலிவ் - கோவை
2. Mrs. ஜாய்மேத்யூ - வி.கே.புரம்
3. D. விஜயாகாந்தி - கூத்தம்பாக்கம்
4. Mrs. வசந்தாரபீந்திரன் - தூத்துக்குடி
5. D. அன்புக்கமலம் - காரைக்குடி
6. Mrs. கிரேஸ்டெல்லா பக்தன் - ஆதம்பாக்கம்
7. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் - கோவை
8. K. ராணிமூர்த்தி - ஏற்வாடி
9. S. சாந்தகுமாரி - நாசரேத்
10. Mrs. ஜெபாநியூட்டன் - தூத்துக்குடி
11. K.S. மாணிக்கவாசகம் - திருச்சி
12. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் - மதுரை
13. J. மேரிஜெயக்குமார் - மதுரை
14. Mrs. ஃபுளோராசுந்தர் - மதுரை
15. Mrs. ஜெபாமோசஸ் - விளாத்திகுளம்
16. Mrs. சந்திராஆல்பர்ட் - தூத்துக்குடி
17. J. செல்வராஜ் - தூத்துக்குடி
18. S. அன்னம்மாள் - தூத்துக்குடி
19. R. அந்தோணியம்மாள் - கலுங்கவிளை
20. Mrs. ஜோன் தர்மராஜ் - திருநெல்வேலி
21. P. சந்திராடேனியேல் - நஞ்சான்குளம்
22. Mrs. ஜெயாபானி ஜெபராஜ் - மேற்குதாம்பரம்
23. T. ராஜாத்தி - கோம்பை
24. R. ராமச்சந்திரன் - ஒட்டநத்தம்
25. R. கஸ்தூரி - ஒட்டநத்தம்
26. S. ஓசியாஹரிராகவன் - திருவள்ளூர்
27. Mrs. ஃபிராங்களினா ஜான் - ஊட்டி
28. J.S. ஜெயாமேரித்தாய் - திண்டுக்கல்
29. Mrs. ஆலிஸ்குணசீலி - தூத்துக்குடி
30. S. ஜாய்சந்திரகாந்தா - நல்லூர்
31. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் - திருநெல்வேலி
32. Mrs. ஹெத்சிசெல்வின் - சென்னை
33. Mrs. நவரத்தினம் இன்பராஜ் - நாசரேத்
34. S. செல்வராஜ் சாலமோன் - திருநெல்வேலி
35. Mrs. ரூபவல்யா - தூத்துக்குடி
36. Mrs. பாலின்மார்ட்டின் - சிவகங்கை
37. A. டேவிட்ஜெயச்சந்திரன் - மதுரை
38. C. அருள்ராஜ் - சென்னை
39. R. ஞானசிரோன்மணி - சமயநல்லூர்
40. R. பாரதி - கோபி
41. Mrs. இளவரசி ஜோபிதா - துடியலூர்
42. R. கிரேஸ்சங்கீதா - தூத்துக்குடி
43. J. ஜான்சி - ஆனைமலை
44. S. அசோக்குமார் - தூத்துக்குடி
45. D. ஜெபக்குட்டிமோசஸ் - திருநெல்வேலி

**"உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்"**
**வெளிப்படுத்தல் 2:25**

ப.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்
Bible Characters

1




## பரிசுத்த வேதாகமத்தில் ஆதாம்
## Adam In The Holy Bible

1. ஆதாம் தேவனால் உண்டானவன் - லூக்.3:38
2. ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என பெயரிட்டான் - ஆதி.3:20
3. ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டார்கள் - ரோ.5:19
4. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டாள் - 1தீமோ.2:14
5. ஆதாம் மீது தேவனுடைய குற்றச்சாட்டு - ஆதி.3:17
6. மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது - ரோம.5:14
7. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறோம் - 1கொ.15:22
8. யோபு, நான் ஆதாமைப்போல என் மீறுதல்களை மூடி, என் அக்கிரமத்தை என் மடியிலே ஒளித்துவைத்தேனோ? - யோபு31:33
9. தேவனாகிய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு நீ எங்கே இருக்கிறாய் என்றார் - ஆதி.3:9
10. ஆதாம் உயிரோடிருந்த நாட்கள் 930 வருஷம் - ஆதி.5:5

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***ஏன் ஒருவனைப் படைத்தார்?***

**விடை:** "அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார்? **தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படி தானே.** ஆகையால் ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" - மல்கியா 2:15





பு.ஏ

வேதாகம கதாபாத்திரங்கள்
Bible Characters

2



## பரிசுத்த வேதாகமத்தில் யோவான்ஸ்நானன்
## John the Baptist In The Holy Bible

1. தேவனால் அனுப்பப்பட்ட மனுஷன் - யோவா.1:6
2. எலிசபெத் மற்றும் சகரியாவுக்கு பிறந்த மகன் - லூக்.1:63
3. வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் இவனுடைய ஆகாரமாயிருந்தது - மத்.3:4
4. மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம்பண்ணினான் - மத்.3:2
5. என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல என்றான் - மாற்.1:7
6. யோவான் ஒரு அற்புதமும் செய்யவில்லை - யோ.10:41
7. ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவானைப் பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை - லூக்.7:28
8. யோவானால் இயேசு ஞானஸ்நானம் பெற்றார் - மத்.3:13
9. இவன் நீதியும் பரிசுத்தமுள்ளவனுமாயிருந்தான் - மாற்.6:20
10. யோவான் சிரச்சேதம் பண்ணப்பட்டான் - மாற்.6:28

**இந்தப் பாடத்திற்கான கேள்வி:**

***அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டுமென்றவன் யார்?***

**விடை:** "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்" என்றவன் **(யோவான்ஸ்நானன்)** - யோவான் 3:30

